# SREE NARAYANA GURU

## THE LIFE AND TEACHINGS



INTERNATIONAL CONFERENCE PROCEEDINGS


Chief Editors

Dr. M.. Ilangovan

Dr. E. K. Girisan

**Title: Proceedings of the International Conference on the Life and Teachings of Sree Narayana Guru (ICLTSNG-21)**


| | |
|---|---|
| Editors: | Dr M Ilangovan<br>Dr E K Girisan |
| Published by: | Sree Narayana Guru College<br>K G Chavadi,<br>Coimbatore -641 105 |
| Printed by: | T V SEKHARAN SONS CHARITABLE TRUST<br>Coimbatore |
| ISBN: | 978-93-5526-674-3 |
| Edition: | First |
| Month and Year: | October, 2021 |



| | |
|---|---|
| Copyright @ | SNGC |



| | |
|---|---|
| Pages: | 372 |
| Price: | Rs.500 |

| | | | |
|---|---|---|---|
| 38 | Sree Narayana Guru's Philosophy has a Strong Relevance Today | *Sindhu.S, Assistant Professor of English, Sree Narayana Guru College, K. G. Chavadi.* | 255 |
| 39 | ஸ்ரீநாராயணகுருவின் ஆன்மிக சிந்தனைகள் | *முனைவர் த, தர்மராஜன் தமிழ் இணைப்பேராசிரியர். ஸ்ரீநாராயணகுரு கல்லூரி. கோவை - 641 105*<br>Email tamildharmarajan@gmail.com | 260 |
| 40 | ஸ்ரீநாராயண குருவின் பார்வையில் ஆலய வழிபாட்டு முறைகள் | *முனைவர் சி, சுஜாதாப்ரீத் தமிழ் இணைப்பேராசிரியர், ஸ்ரீநாராயணகுரு கல்லூரி, கோவை - 641 105. இ-மெயில் : csujathapreeth73@gmail.com* | 268 |
| 41 | ஸ்ரீ நாராயணகுரு-சமுதாய மறுமலர்ச்சியின் முன்னோடி | *A. சுமதி, உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை, ஸ்ரீ கிருஷ்ணா ஆதித்யா கலை அறிவியல் கல்லூரி, கோவைப்புதூர் கோவை* kovaisumathi@gmail.com | 276 |
| 42 | திரு நாராயணகுரு ஆலய தெய்வ வழிபாட்டில் குருவின் புதிய வழிமுறைகள் | *ஏ. தேவிகா, உதவிப்பேராசிரியர் இந்திதுறை, AJK கலை மற்றும் அறிவியல் கல்லூரி நவக்கரை, கோவை*<br>*E Mail id :devika@ajkcas.com* | 281 |
| 43 | ஸ்ரீ நாராயணகுருவின் வாழ்வியல் படைப்புகள் | *முனைவர் சுசெல்வநாயகி., துறைத்தலைவர் தமிழ்த்துறை ஸ்ரீ கிருஷ்ணா ஆதித்யா கலை அறிவியல் கல்லூரி கோவைப்புதூர் கோவை* | 292 |
| 44 | ശ്രീനാരായണഗുരു നവോത്ഥാന നായകൻ | *ഡോ. എസ് അനിത, N M ക്രിസ്ത്യൻ കോളേജ് മാർത്താണ്ഡം* | 295 &359 |
| 45 | ശ്രീ നാരായണഗുരുവിനെ സാഹിത്യസൃഷ്ടികൾ | *A.രജിത, അസി. പ്രൊഫസർ (മലയാളം), AJK കോളേജ്, കോയമ്പത്തൂർ.* | 297 |
| 46 | ഇപ്പോഴത്തെ സാഹചര്യത്തിൽ ശ്രീനാരായണ ഗുരുദേവന്റെ തത്വചിന്തകളുടെ പ്രസക്തി" | *ശ്രീജി M P,* പരവൂർ | 309 |
| 47 | നവോത്ഥാനം ശ്രീനാരായണനിലൂടെ | *എൽ. ജെസ്സി., അസി. പ്രൊഫസർ ഭാഷാവിഭാഗം, (ഹിന്ദി), ശ്രീനാരായണഗുരു കോളേജ്, കോയമ്പത്തൂർ. ഇമെയിൽ : jessysngchindi@gmail.com* | 318 |
| 48 | ഗുരുദേവൻ : തത്വങ്ങൾ രചനകളിലൂടെ | *കൃഷ്ണാ വർമ്മ. എ IInd M.S.W. ശ്രീനാരായണഗുരു കോളേജ്, കോയമ്പത്തൂർ.* | 323 |

# ஸ்ரீநாராயண குருவின் பார்வையில் ஆலய வழிபாட்டு முறைகள்

**முனைவர் சி. சுஜாதாப்ரீத்**
தமிழ் இணைப்பேராசிரியர்,
ஸ்ரீநாராயணகுரு கல்லூரி,
கோவை - 641 105.
இ-மெயில் : csujathapreeth73@gmail.com

## முன்னுரை

கடந்த 18-ம் நூற்றாண்டில் கேரளத்தில் சமுதாய சீர்குலைவு தலைதூக்கி இருந்தது. தேவையற்ற மதசிந்தனைகள், ஜாதிவேறுபாடு, தீண்டாமை, மூடநம்பிக்கைகள் போன்றவை தலைவிரித்தாடிய காலமாக திகழ்ந்தது. அக்காலகட்டத்தில் தோன்றிய ஸ்ரீநாராயணகுரு அவர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் வாழ்ந்த மக்களை தன் செயல்களாலும், போதனைகளாலும் தலைநிமிர்ந்து நிற்க ஒரு மாபெரும் ஒளிவிளக்காய் விளங்கினார். அவர் வாழ்ந்த வாழ்க்கையும் மக்களுக்கு அளித்த போதனைகள் மூலம் தாம் ஒரு "**தலைசிறந்த ஞானி**" என்பதை மக்களுக்கு உணர்த்தினார். இத்தகைய குருதேவர் வலியுறுத்திய ஆலய தெய்வ வழிபாட்டில் உள்ள புதிய வழிமுறைகளைப் பற்றி இங்கு ஆராய்வோம்.

## குருதேவர் கோயில் நிர்மாணம் செய்ததற்கு காரணங்கள்

இந்து மதத்தைச் சார்ந்த மக்கள் அவர்ணர் எனவும் சவர்ணர் எனவும் இரண்டு பகுதிகளாகப் பிரிந்து வாழ்ந்தனர். சவர்ணர் உயர்ந்த குலத்தை சார்ந்தவர் என்றும், அவர்ணர் தாழ்ந்த குலத்தை சார்ந்தவர் எனக்கருதினர். அவர்ணர் அவர்கள் கோவில்கள் கட்டக்கூடாது. அங்கு பிரதிஷ்டை மற்றும் பூஜைகள் எதுவும் நடத்தக்கூடாது. இவை அனைத்தும் சவர்ணர்கள் மட்டுமே நிறைவேற்றக் கடமைப்பட்டவர்கள் என்ற சமூகநிலை நிலவியது. தாழ்த்தப்பட்ட மக்கள் கோயில்களுக்குள் நுழைய முடியாது. வெளியில் குறிப்பிட்ட தூரத்தில் நின்றுதான்

சாமி கும்பிட வேண்டும் என்ற நிலை இருந்தது. மக்கள் தங்கள் காணிக்கைகளைப் பொட்டலமாகக் கட்டிச்சுவருக்கு வெளியே நின்று தூக்கி எறிய வேண்டும் என்பதும், உட்புறமிருந்து பிரசாதம் எறியப்படும்போது பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலைமை இருந்தன. சமூகத்தில் உள்ள இத்தகைய ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்பட்டால் மட்டுமே மக்கள் வாழ்க்கை முன்னேற்ற பாதையில் செல்ல இயலும் என்பதை குருதேவர் உணர்ந்தார். இவையே குருதேவர் கோயில்களை நிறுவுவதற்கு காரணங்களாக அமைந்தன.

**அருவிப்புரத்தில் குருதேவர்**

ஆலயப் பிரவேசமோ, ஆலய வழிபாடோ பெறமுடியாத அருவிப்புர மக்கள் நிரந்தரமாகத் தமக்கென்று வணங்கி, வழிபட ஒரு ஆலயம் வேண்டுமென குருவினை அணுகினர். அவர்களது கோரிக்கையை ஏற்று அங்கு ஓர் ஆலயம் எழுப்ப வேண்டும் என குருதேவர் தீர்மானித்தார். மக்கள் அனைவரும் ஒன்றுபட்டுக் கற்பதற்கும், கற்பிப்பதற்கும் ஒரு பொதுவான இடம் அவசியம் என்றும், நல்லொழுக்கத்திற்கும், அறிவிற்கும் மையமாக கோவில்கள் விளங்க வேண்டும் என குருதேவர் எண்ணினார்.

1888-ல் சிவராத்திரி அன்று அதிகாலை 3 மணி அளவில் ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். குருதேவர் நதியில் மூழ்கி சிவலிங்க வடிவில் ஒரு கல்லினை எடுத்து வந்தார். அங்குள்ள பீடத்தில் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்தார். அப்பொழுது விண்ணில் ஒரு ஒளி ஏற்பட்டது. அதனை கண்டு அனைவரும் வியந்தனர். இதுவே மிகப்பிரபலமான 'அருவிப்புரம் பிரதிஷ்டை' ஆகும்.

இது தாழ்த்தப்பட்டு, அடிமைத்தனத்தில் ஊறிப்போயிருந்த மக்களை தட்டியெழுப்பி மேம்படுத்துவதற்காக குரு செய்த மிகப்பெரிய புரட்சியின் சின்னமாக விளங்கியது.

குறுகிய காலத்தில் அருவிப்புரத்தில் ஒரு துறவி மடமும் பாடசாலையும் உருவாயிற்று. அங்கு சுவர் எழுந்தவுடன் குருதேவர்

''ஜாதி வேற்றுமையையும் மதத்துவேஷமும்
ஏதுமில்லாமல் அனைவரும்
சகோதரத்துவத்துடன் வாழ்கின்ற
முன் மாதிரியான இடமே இது''

என்று எழுதிவைத்தார். கல்வி அறிவுள்ள சீடர்களை கற்பித்தலுக்காக குருதேவர் பயன்படுத்தினார். அருவிப்புரம் பக்தர்களுடைய புனிதத்தலமாக விளங்கியது.

***சிவகிரி மடம்***

வர்க்கலை மலையின் உயர்ந்த பகுதியில் சிவன்கோயில் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் குருதேவருக்கு ஏற்பட்டது. குருதேவரின் எண்ணத்தை அறிந்து கொண்ட பக்தர்கள் அங்கு கோவிலை நிறுவி வணங்கி வந்தனர். சிவன்கோயில் கட்டியபின் அப்பகுதி 'சிவகிரி' எனப்பெயர் பெற்றது.

இதே இடத்தில் தான் குருதேவரின் சமாதி மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இப்பொழுது சிவகிரி அழகான இயற்கைச் சூழலோடு கூடிய அமைதியும், ஆனந்தமும் நிறைந்த புனித இடமாக விளங்குகிறது.

சிவகிரியில் தாழ்த்தப்பட்ட சாதிக் குழந்தைகளுக்கு பூஜை விதிகளையும், வேதப் பாடங்களையும் குருதேவர் கற்றுக்கொடுத்தார். ஆன்மீக வழிகாட்டுதலோடு விவசாயம், கைத்தொழில், கல்வி போன்ற விஷயங்களிலும் மக்களுக்கு வழிகாட்டியாக சிவகிரி விளங்குகிறது.

சிவகிரி மடத்தின் வருங்காலப்பணிகள் குறித்த குருவின் திட்டங்கள் மக்கள் கவனத்தைக் கவரும் வகையில் இருந்தது அவை.

1. மதம் குறித்த அடிப்படை அறிவினை மக்களிடம் பரப்ப வேண்டும். அதன் வாயிலாக இறைவன் குறித்து விழிப்புணர்வும், பக்தியும் மக்களிடம் இயல்பாக வரவேண்டும்.

2. மக்கள் உடல், மனம், வாக்கு ஆகியவற்றில் தூய்மை பெற வேண்டும். அதை பெறுவதற்கு உதவி செய்ய வேண்டும்.

3. அஹிம்சை, அன்பு, ஒற்றுமையுணர்வு ஆகியவற்றின் உயர்வுகளை மக்களிடம் எடுத்துக்கூறி அவர்களை அதனை நடைமுறையில் செயல்படுத்துமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

4. மக்களின் கல்வித்தரத்தினை உயர்த்த வேண்டும்.

5. இறைப்பணியாற்றவும் சமுகத்தொண்டாற்றவும் உரிய மனப்பக்குவம் கொண்ட இளைஞர்களைத் தேடிப்பிடித்து அவர்களுக்குப் பிரம்மச்சரியத்தின் உயர்வுகளைப் போதித்து துறவுநிலைக்கு அவர்களைக் கொண்டு செல்ல வேண்டும்

என்று கூறிய குருவின் இலட்சியங்கள் உயர்ந்த தன்மை கொண்டதாக விளங்கியது. மக்கள் மத்தியில் மதிப்பு பெற்றிருந்த சடங்கு, சம்பிரதாயங்களை அடியோடு மாற்றி குரு புதிய வழிமுறைகளை ஏற்படுத்தினார்.

***சிவகிரி புனித பயணம்***

வல்லபசேரி கோவிந்தன் வைத்தியர் மற்றும் டி.கே. கிட்டன் ஆகியோர் சிவகிரியை ஒரு புண்ணியத்தலமாக அறிவிக்க வேண்டும் என்று குருவிடம் கோரிக்கை வைத்தனர். குருவும் ஏற்றுக்கொண்டார்.

சிவகிரிக்கு புனிதப்பயணம் மேற்கொள்ளும் பக்தர்கள் ஐவகைத் தூய்மைகளை 10 நாட்கள் கடைப்பிடிக்கட்டும். மஞ்சள் ஆடை அணிய வேண்டும். யாத்திரை எளிய முறையில் இருக்க வேண்டும். இறைவனை வாழ்த்திப்பாடி பஜனை செய்யட்டும் என குருதேவர் கூறினார். மக்கள் செய்யக்கூடிய ஒவ்வொரு செயலிலும் ஒரு குறிக்கோள் இருக்க வேண்டும்.

1. கல்வி 2. சுத்தம் 3. பக்தி 4. சங்கம் அமைத்தல் 5. விவசாயம் 6. தொழில் 7. கைத்தொழில் 8. தொழில் நுட்பவளர்ச்சி

என்ற இந்த தலைப்புகளில் பல்துறை வல்லுநர்கள் இது குறித்து விரிவுரையாற்ற வேண்டும். பக்தர்கள் கவனத்துடனும், கட்டுப்பாட்டுடனும் கேட்டு, தங்களுடைய

வாழ்வில் பயன்படுத்தி, வெற்றி பெற வேண்டும். வாழ்க்கை அர்த்தமுள்ளதாக அமைய வேண்டும். இவையே புனிதப்பயணத்தின் நோக்கமாக இருக்க வேண்டும் என குருதேவர் கூறினார். தான் போகும் இடங்களிலும் எண்வகைப்பொருள் பற்றி எடுத்துக்கூறி மக்களை ஈடுபாடு கொள்ளச் செய்தார்.

**சாரதாமடம்**

குருதேவர் 1912-ல் கல்வி தேவதையான 'சாரதாதேவி'யை (சரஸ்வதியை) சிவகிரியில் பிரதிஷ்டை செய்தார். சரஸ்வதி தேவி கோயில் எட்டுப்பக்கங்களைக் கொண்ட அமைப்பாக பல வண்ணக்கண்ணாடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பல வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தாமரைப் பூ வடிவில் அமைத்த சலவைக்கல்லில் சரசுவதி தேவியின் உருவம் அமைந்திருந்தன. இங்கே ஆலயவழிபாடு இல்லை. திருவிழாக்கள் இல்லை. உணவுப் பொருட்கள் வழங்குப்படுதல் இல்லை. ஊர்வலங்கள் இல்லை. அதற்கு பதிலாக தெய்வ வணக்கம், இசைப்பாடல்கள், தியானம் ஆகியவை மட்டுமே நடைபெற வேண்டுமென குருதேவர் வலியுறுத்தினார்.

**குருதேவரால் கட்டப்பட்ட கோயில்களும் அதன் காரணங்களும்**

மன அமைதி பெற உதவுவது இறைவழிபாடாகும். இறைவழிபாட்டின் மூலம் நிச்சயமாக ஒவ்வொருவரும் அமைதியைக் காணமுடியும். நல்ல அமைதியான மனதையும் பெறமுடியும். இதை உணர்ந்த குருதேவர் சிறிய அளவில் மிகவும் தூய்மையான முறையில் கோயில்களை அமைக்க வேண்டும் என கூறினார்.

அந்த கோயில்களில் அறிஞர்கள் மூலம் சொற்பொழிவு நடைப்பெற வேண்டினார். குருதேவரின் மற்றொரு நோக்கம் கோயில்களில் நல்ல நூல்நிலையங்கள் அமைக்க வேண்டும் என்பதாகும்.

இறைவனை வழிபடுவதன் மூலமும், நல்ல நூல்களை வாசிப்பது மூலமும், கோயில்களில் நடைபெறும் ஆன்மீகச் சொற்பொழிவின் மூலமும் கிடைக்கும்

மனநிறைவு ஆகியவை மக்கள் வாழ்வை செம்மையாக்கும் என்பது குருவின் எண்ணமாகும்.

அதிக பொருள் செலவில் கோயில்கள் கட்டுவதை குருதேவர் விரும்பவில்லை. திருவிழாக்களிலும் அதிக செலவு செய்வதை வெறுத்தார். அதற்கு மாறாக கோயில் என்பது நன்றாகக் காற்று வீசும் இடமாகவும், அதிக அளவில் மக்கள் கூடுவதற்கு ஏற்ற இடமாகவும், சிரமமின்றி வழிபாடு செய்வதற்கும், சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்துவதற்கு உரிய இடமாகவும் கோயில் இருக்க வேண்டும் என கூறினார்.

மேலும் கோயிலின் உட்பிரகாரத்தில் தோட்டம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். கோயிலுக்குள் பள்ளிகளும், தொழிற்பயிற்சிக் கூடங்களும் செயல்பட வேண்டும். காணிக்கைப்பணம் பொதுமக்களுக்கே செலவிடப்படவேண்டும் என்றும் கூறினார். குளத்தின் தூய்மை பாதுகாப்பது அரிது என்பதால் கோயிலை ஒட்டிக்குளம் அமைப்பதைக் குருதேவர் விரும்பவில்லை.

கேரளத்தில் குருதேவர் அமைத்த கோவில்களில் இவையே பின்பற்றப்படுகின்றன. பணி செய்யும் மகளிர்க்கான உணவு விடுதிகளும், சமய நூல்கள் நிறைந்து விளங்கும் நூலகங்களும் இவ்விடங்களில் உள்ளன.

குருதேவர் அமைத்த கோயில்களின் பூசாரிகள் பலர் தாழ்த்தப்பட்ட பிரிவைச் சார்ந்தவர்கள் ஆவர். அவர்களுக்கு ஒன்பது ஆண்டுகள் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சிக் காலத்தில் வேதங்கள், மந்திரங்கள், சாத்திரங்கள் போன்றவை கற்றுக் கொடுக்கப்பட்டன.

**ஆலய வழிபாட்டில் குருதேவரின் புதிய வழிமுறைகள்**

நாராயண குருவின் கோயில்களில் முதலில் சிவலிங்கத்தையும், சுப்பிரமணியர், ஜெகநாதர் போன்ற கடவுள்களை பிரதிஷ்டை செய்த குரு அடுத்த கட்டத்தில் விக்கிரகங்களை வைத்து வணங்குவதற்கு பதிலாக சத்தியம், தர்மம், தயா ஆகிய சொற்களை எழுதி வைத்து வழிபாடு செய்தார். கரமுக்கு என்னும் இடத்தில்

அமைக்கப்பெற்ற கோவிலில் ஒரு விளக்கை ஏற்றி வைத்து வணங்கச் செய்தார். கடைசியாக களவங்கோடு என்னும் இடத்தில் கட்டப்பட்ட கோவிலில் கண்ணாடியில் 'ஓம்' என்று எழுதி அதனை வழிபடுமாறு செய்தார்.

"மனிதனுக்கு செய்யும் சேவையே
கடவுளுக்குச் செய்யும் சேவை"

என்பதை மனதில் கொண்டு மனித இன மேம்பாட்டிற்காக அரும்பாடுபட்டவர் நம் குருதேவர்.

கேரளத்தில் 29 கோவில்களும், கர்நாடகாவில் மங்களூர், தமிழ்நாட்டில் கோட்டாறு, பவானி, ஈழத்தில் கொழும்பு முதலிய ஊர்களில் குருதேவர் நிறுவிய கோவில்கள் உள்ளன.

**முடிவுரை**

ஒரே சாதி, ஒரே மதம், ஒரே கடவுள் என்பது நாராயண குருவின் கொள்கையாகும். குருதேவர் வாழ்ந்த காலகட்டத்தில் மூடபழக்கவழக்கங்கள் கொடூர தாண்டவம் ஆடிய காலமாக திகழ்ந்தது. மனிதனுடைய முன்னேற்றத்திற்கு இத்தகைய மூடப்பழக்கவழக்கங்கள் தடைக்கற்களாக உள்ளன என்பதை அறிந்து கொண்டார். இவற்றை அகற்ற முதற்கட்டமாக கோவில்களை அமைத்தார். நம் குருதேவர் நிறுவிய ஆலயத்தினுள் அனைத்து இனமக்களும் செல்வதற்கு அனுமதி இருந்தது. அக்கோயில்களில் வீண் சடங்குகளை தவிர்த்து மக்கள் முன்னேற தேவையான புதிய வழிப்பாட்டு முறைகளை செயல்படுத்தினார். கால வேறுபாட்டால் கோயில்கள் பள்ளிக்கூடங்களாகவும், சொற்பொழிவு மன்றங்களாகவும், தறிக்கூடங்களாகவும் பயன்படப் போகின்றன எனவும் கூறினார். நம் குருதேவர் கூறியதை போலவே இன்றைய காலத்தில் பள்ளிக்கூடங்கள், சொற்பொழிவு மன்றங்கள், தறிக்கூடங்கள் போன்றவை தோன்றியுள்ளன.

**துணைநூற்பட்டியல்**

1. ஸ்ரீநாராயணகுருவின் வாழ்க்கை வரலாறு (2001) - டாக்டர். ராஜலட்சுமி. பதிப்பகம் - குருதேவதர்மம், ஸ்ரீநாராயணகுரு மந்திரம், இராஜேஸ்வரி காலனி, விருகம்பாக்கம், சென்னை - 600 092.

2. துறவி வேந்தர் ஸ்ரீநாராயணகுரு (2013) - டி. பாஸ்கரன். சாகித்திய அகாதெமி, இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை, புதுதில்லி-110 001.

3. வயல்வார முனிவர் தவத்திரு ஸ்ரீநாராயணகுரு (அக்டோபர் 2001) - புலவர் கி. முத்து. பதிப்பகம் - சங்கரம்மாள் பதிப்பகம், 24, பாரதியார் தெரு, கரிமேடு, மதுரை - 625 016.

4. நாராயணகுரு (அக்டோபர் 2004) - கே. சீனிவாசன். தமிழினி, 67, பீட்டர்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை - 600 014.

5. ஸ்ரீநாராயண குரு (2006) - முர்கூட் குன்ஹப்பா, இயக்குநர், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா. ஏ-5, கிரீன் பார்க், புதுதில்லி - 110 016.